ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 ஆடி மாதம்

# புத்தர் நெறியைப் பரப்பியது போல நாம் சித்தர் நெறியைப் பரப்ப வேண்டும் !

சித்தர் நெறி இந்தியாவுக்கு மட்டும் உரியது அல்ல.



சித்தர் நெறி உலகம் முழுவதற்கும் உரியதாகும்.

இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

43,73,126ஆம் ஆண்டின் ஆடி மாத வெளியீடு.

*தலைப்பு*:- **"புத்தர் நெறியைப் பரப்பியது போல் நாம் சித்தர் நெறியைப் பரப்ப வேண்டும்!"**

## உள்ளுறை

1. **"புத்தர் நெறியைப் பரப்பியது போல் நாம் சித்தர் நெறியைப் பரப்ப வேண்டும்!"** - பாளையங்கோட்டையைச் சேர்ந்த மாணுக்கர் ஒருவருக்கு அவரது வாழ்க்கையைப் பற்றி விளக்கியும், இனிமேல் நாம் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
2. **"அருள்வாக்குத் தொகுதி திருமடல்"** - சமயக் குரவர் நால்வர் சன்னிதானம் அவர்களுக்கு குருதேவரின் தலைமைப்பீடத்திலிருந்து சித்தரடியான்களின் நிலைகளை விளக்கி எழுதப்பட்ட நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
3. **"இந்துமதம்தான் சைவ சமயம்"** - சைவ சமய மடாதிபதிகளுக்கும், ஆதினங்களுக்கும் சைவ சமயம் என்பது தமிழர்களுடைய மெய்யான இந்துமதம்தான் என்று விளக்கம் தந்து சித்தர் யோகமுனி எழுதிய சிறு கட்டுரை.

# புத்தர் நெறியைப் பரப்பியது போல் நாம் சித்தர் நெறியைப் பரப்ப வேண்டும்.

சென்னை - 53,
23-4-93.

அனுப்புநர்:-

இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை,
குவலய குருபீடம், எல்லாம் வல்ல சித்தர்,
குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,
பதினெண்சித்தர் மடம்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53.

பெறுநர்:-

அருள்மிகு கன்னியாகுமரி அம்மன் சன்னிதானம்,
S. செந்தில்ராசு B.E.,
E-225, Spic Nagar, தூத்துக்குடி - 5.

ஏற்புச் செல்வனே! சித்தரடியானே! செல்வமே! இளைய மகனே! இன்னும் குழந்தை மனமும், சிந்தையும் உடைய செல்ல மகனே! செல்வ மகனே!

1) நீ சிந்திக்க வேண்டும். ஆனல், யார் மீதும் சீற்றம் கொள்ளத் தேவையில்லை!

2) குருவாலும், பெற்ற தாயாலும், உற்ற தோழனாலும் குற்றம் புரியின் உடனே உற்று அறிந்து நேரடியாக வினாவெழுப்பி விளக்கம் பெற்றேயாக வேண்டும். நடுநிலையிலிருந்து சிந்தித்திடு.

3) “உனக்கு திருமண யோகமே இல்லை. சில ஆண்டுகள் கழித்துத்தான் திருமணம் செய்ய வேண்டும்” என்று யாம் கூறியதை மாற்றுவதற்காகத்தான் சண்முக சுந்தரி நாச்சியார் எம்மைத் திருநெல்வேலிக்கு வரவழைத்தார்கள். அவரும், தங்களின் உறவினரான போலீசுக்காரரும் பலவாறு, பலமுறை கெஞ்சி வேண்டிக் கேட்டுக் கொண்டதால் யாம், “அருளுலக ஒப்புதல் பெறுகிறோம். அதன்பிறகு பெண்ணை நேரில் பார்ப்போம், முடிவெடுப்போம்; எனது தலைமையில்தான் திருமணம் நடக்க வேண்டும்; என்று கூறுகிறோமோ அப்பொழுதுதான் திருமணம் நடக்க வேண்டும்” என்று மிகத் தெளிவாகக் கூறிச் சென்னை திரும்பினோம்.

4) மீண்டும் திருநெல்வேலி வந்தபோது சண்முக சுந்தரி நாச்சியார் கலசத்தைக் கையில் ஏந்தியபடி, இரயில்வே நிலையத்தில் வந்து வரவேற்ற போது, “அம்மா, அருளுலக ஒப்புதல் பெற்றிருக்கிறோம். தங்கள் மகனின் திருமணத்திற்கு என்னைப் பெண் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். நான் நேரில் பெண்ணைப் பார்க்க வேண்டும். நான் சொல்லுகிற போதுதான் தங்களின் மகனின் திருமணத்தை நடத்த வேண்டும்”, என மிகத் தெளிவாகச் சொன்னோம். ஆனால், பெண்களுக்கே உரிய அவசரச் சிந்தையாலும், சம்பந்தி வீட்டாரின் தோட்டம், நஞ்சை நிலம், பணம் முதலியவை தேவை என்ற பேராசையாலும் யாம் சுற்றுப்பயணம் முடிந்து ஊர் திரும்புவதற்குள் சம்பந்தியை வரவழைத்து திருமணத்திற்குச் சத்திரமும் பார்ப்பதாக என்னிடம் கூறி விட்டார்கள். யாம் தடுத்தும், எடுத்துக் கூறியும் எம் பேச்சைக் கேட்கவில்லை.

<u>குறிப்பு</u>:- உனக்குத் திருமண யோகமில்லை என்று ஏற்கனவே கூறி விட்டோம் யாம். பெண்ணைப் பார்த்தேயாக வேண்டும் என்று கூறினோம். எமது தலைமையில்தான் திருமணம் நடக்க வேண்டும் என்று கூறினோம். அனைத்தும் மீறப்பட்டன! மீறப்பட்டன! மீறப்பட்டன! இதற்கு யார் பொறுப்பு?

5) யாம் திருமணத்திற்கு முன்பே பரிகாரம் பற்றிக் கூறவில்லை என்று எழுதியிருக்கிறாய்! இந்தக் குற்றச்சாட்டு தவறு. இதுபற்றி நீ நன்றாக விசாரித்தாயா? இப்பொழுது வேண்டுமானாலும் மூவர் குழு சன்னிதானங்களைக் கேட்டுப்பார். நான், '**<u>மணப்பெண்ணைப் பார்க்க வேண்டும். மணப்பெண்ணுக்கு அதிக யோகம் இருந்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குத் திருமண யோகமே இல்லாத செந்தில்ராசுக்குத் திருமணம் செய்யலாம்</u>**," என்று மிகத் தெளிவாக வலியுறுத்திக் கூறினேன். உன்னுடைய தாயாரும், போலீசுக்காரரும் 'மணப்பெண்ணின் தகப்பனாருக்கு இரப்பர் எஸ்டேட் இருக்கிறது, லாரிகள் இருக்கின்றன, நெல்வயல்கள் இருக்கின்றன. கால தாமதம் செய்தால் பெண்ணை வேறு யாருக்காவது கொடுத்து விடுவார்கள்' என்று கூறிப் பதறினார்கள். வைத்தியலிங்கமும் அருகில் இருந்தார். அப்பொழுது நான், "**<u>பணக்கார வீட்டுப் பெண் என்றால் ஒரு 10,000 ரூபாய் பரிகாரத்திற்காகக் கொடுக்கட்டும். நானே திருமணத்தை நடத்தி வைக்கின்றேன்</u>**" என்று சொன்னேன்.

இந்த உண்மையை உன் தாயாரால் மறுக்க முடியாது. ஏனென்றால், கடந்த ஒரு வருடத்திற்குள் மதுரையிலிருந்து துரைராசனும், M.C. இராமனும், சென்னையிலிருந்து மனோகரனும் உன்னுடைய வீட்டிற்கு உன் தாயாரைக் காணச் சென்றார்கள். அப்பொழுது, உன் தாயார் துரைராசனைப் பார்த்து, "டேய் துரை, நீ எப்பொழுது வேண்டுமானாலும் வந்து விட்டுப் போ. ஆனால், உன் குருதேவரைப் பற்றிப் பேசாதே. 10,000 ரூபாய்க்காக என் குடும்பத்தையே அழித்து விட்டார்.

அவர் கேட்ட 10,000 ரூபாயை நான் கொடுத்திருந்தால் எல்லாவற்றையும் சரியாக்கி இருப்பார். நான் பத்தாயிரம் ரூபாய் தராததால் இப்படிக் கெடுதல் செய்து விட்டார். என்றைக்காவது ஒரு நாள் நான் நேருக்கு நேர் உன் குருதேவரைக் கேட்பேன். பத்தாயிரம் ரூபாய்க்காக எவ்வளவு பெரிய கெடுதல் செய்து விட்டார்" என்று மேலும் பலவாறு என் மீதில் குறை கூறிக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

எனவே, உன் தாயாரே ஒப்புக் கொண்டுள்ளார். **நான் உன் திருமணத்திற்குச் சம்மதிக்க வில்லை என்பதையும்; உனக்குப் பரிகாரம் செய்த பின் தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதையும்**.

குறிப்பு:- அன்பு மகனே, நான் உன் தாயாரைக் குற்றம் சாட்டவில்லை; குறை கூறவில்லை. பெண்களுக்கே உரிய பேராசையால்; அவசர புத்தியால், முன் யோசனை இல்லாமல் பத்தாயிரம் ரூபாய் எனக்குக் கொடுக்க கூடாது என்று எண்ணி உன்னுடைய ஏற்புத் தந்தையும், குருவுமே இல்லாமல் உன்னுடைய திருமணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தார். இதுதான் உண்மை. இந்த உண்மையை உன் தாயாரின் வாக்கு மூலம் மெய்ப்பித்திருக்கிறது. இதற்கு துரைராசன், M.C. இராமன், மனோகரன் என்ற மூன்று பேரும் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

6) அன்பு மகனே, மேற்படி உண்மையை உனக்குத் தெரிவித்து உன் மனதைப் புண்படுத்த வேண்டாம், உன் தாயார் மீது குற்றங் கூற வேண்டாம். உனக்கு ஏற்பட்டு விட்ட பாதிப்புக்களுக்கு உன் தாயார்தான் பொறுப்பு என்றெல்லாம் கூறி **உன் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை யாம். எனவேதான், யாம், உன்னோடு எந்த அஞ்சல் தொடர்பும் வைத்துக் கொள்ள வில்லை. டில்லி நோக்கிப் புறப்பட்ட உன்னையும், உன் மனைவியையும் பார்க்கத் தயாராக இல்லை. பல ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிய நீ, தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காக, தமிழ் இனத்துக்காக, இந்துமதத்துக்காக, பல நூறு**

**ஆண்டுகளுக்குப் பிறகு உழைக்கப் புறப்பட்டிருக்கும் போராற்றல் மிக்க தலைவருக்காக, குருதேவருக்காக, உன்னுடைய ஏற்புத் தந்தைக்காக மிகப் பெரிய மனது பண்ணி, தாராள சிந்தையோடு ரூ.25/- (ரூபாய் இருபத்தைந்து)ஐ மாதாமாதம் அனுப்பியதற்கு நன்றி தெரிவித்தோ, அல்லது அதிகமாக நன்கொடை வேண்டும் என்று கேட்டோ கூட உனக்கு ஒரு வரி அஞ்சல் கூட எழுத வில்லை. ஏனென்றால், அப்படி அஞ்சல் எழுதினால் உன் தாயாரைக் குறை கூற வேண்டி நேரிடும்** என அஞ்சினோம்.

குறிப்பு:- இப்பொழுது கூட யாம், திருச்செந்தூர் வந்தது பற்றிக் கேள்விப்பட்டு நீயாகவே எமக்கு அஞ்சல் எழுதியதால்தான்; **'உன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் எள்முனையளவு கூட யாம் பொறுப்பாளியல்ல'** என்ற உண்மையை உனக்குப் புரிய வைக்க வேண்டிய அவசியமும், கட்டாயமும் ஏற்பட்டு விட்டது. உன் தாயார்; துரைராசன், M.C. இராமன், மனோகரன் முன்னிலையில் எம்மைக் குறை கூறி, குற்றம் சாட்டி, திட்டியபோது கூட எமக்குக் கோபமே வரவில்லை. ஏனென்றால், அவர் ஒரு பெண். என்னிடம் தயாராகியும் கூட, எல்லாப் பெண்களையும் போல் அவசரமும், ஆத்திரமும், பேராசையும் உடைய பெண்ணாகச் செயல்பட்டு விட்டார்கள். தன் மகனுடைய குருதேவரை, ஏற்புத் தந்தையை தவறாக நினைத்து புறக்கணித்து ஒதுக்கியதோடு வசைபாடித் திட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். **இது என்ன நியாயம்?** உன் வாழ்க்கை பாழானதற்காக, உன்னைக் காப்பாற்ற முடியாமற் போனதற்காக எமது சிந்தையும், நெஞ்சமும் **குருதிக் கண்ணீர் வடித்துக் கொண்டேயிருக்கின்றன**.

7) அன்பு மகனே! உன் வாழ்க்கை பாழானதற்குக் காரணம், நமது அடியான்களில் முதல் வரிசையில் இருந்திட்ட கொட்டாம்பட்டிச் சேவுகனும், மதுரை முத்தையாவும் உன் தாயார் கொடுத்த

இலஞ்சத்திற்காக குருதேவரின் ஆணை இன்றி உன் திருமணத்தைத் தலைமை தாங்கி நடத்தினர்கள். அதற்காக அவர்களை நமது அனைத்து வகையான நிறுவன நிர்வாகங்களிலிருந்தும் முழுமையாக விலக்கி வைத்துக் கண்டித்தோம். இதைத் தவிர வேறு என்ன செய்வது என்று தெரியவில்லை எமக்கு.

8) அன்பு மகனே! உன்னுடைய பதிலில் மிக நாகரிகமாக நீயும் என்னைக் குற்றம் சாட்டியிருக்கிறாய். உன் குருதேவரின் மீது, உன்னுடைய ஏற்புத் தந்தை மீது நீ குற்றஞ் சாட்டுவது நீதியா? நேர்மையா? சரியா?

குறிப்பு:- அன்பு மகனே! நீ உன் ஏற்புத் தந்தையை உண்மையிலேயே மதித்திருந்தால்; **நீ உண்மையிலேயே உன் குருதேவரின் மீது உண்மையான பத்தி கொண்டிருந்தால்; "மகனே! மலை மீதிருந்து கண்ணை மூடிக் கொண்டு கடலுக்குள் குதி" என்று யாம் ஆணையிட்டால் அப்படியே உடனடியாகச் செய்பவனாக இருந்திருக்க வேண்டும்.** அதாவது, நீ, டில்லியிலிருந்து சென்னை-பெரம்பூர், E.S.I.மருத்துவமனை குடியிருப்புக்கு வந்த போது, யாம், "**மகனே உன் தாயார் தவறு செய்து விட்டார்கள். உன் திருமணத்தை நிறுத்து. இந்தத் திருமணத்தால் துன்பமும் தோல்வியும்தான் கிடைக்கும். எனவே, நான் உன்னுடைய திருமணத்திற்கு வர முடியாது**" என்று அழுத்தந் திருத்தமாக, வெளிப்படையாகவே கூறியும் கூட படித்த வீரமுள்ள இளைஞனை நீயே குருமொழி கேளாதவனாக மாறினாய். அதைப்பற்றி இன்று வரை நீ உணரவில்லை; சிந்திக்க வில்லை.

9) அன்பு மகனே, திருமணம் செய்து கொண்ட பிறகாவது நீ என்னை நேரில் வந்து சந்தித்து, "**நடந்து விட்ட தவறுக்கு எப்படியாவது பரிகாரம் செய்தாக வேண்டும். என்னுடைய ஏற்புத் தந்தையாகிய தாங்கள் எல்லாம் வல்ல சித்தர் என்ற சிறப்புக்குரியவர். உங்களுடைய மகனுடைய தவறைப் பொறுத்து மன்னித்து உடனேயே**

**<u>திருநெல்வேலிக்கு வாருங்கள். எவ்வளவு செலவானாலும் சரி, எல்லாப் பரிகாரங்களையும் செய்து கொள்கிறேன். உங்கள் மகன் கூப்பிடுகிறேன். நீங்கள் கட்டாயம் வர வேண்டும்....”</u>** என்று உரிமையோடு கூறி எம்மை அழைத்துச் செல்ல முயன்றாயா? முயன்றாயா? முயன்றாயா? இன்று வரையிலும் இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

10) அன்பு மகனே! உனக்குக் குழந்தை பிறந்ததைப் பற்றி எழுதினாய். ஆனால், அதற்குக் கூட யாம் பதில் எழுத அஞ்சினோம். உனக்கு உண்மையிலேயே உன்னுடைய ஏற்புத் தந்தையிடத்தில் பற்றும், பாசமும், நம்பிக்கையும் இருந்திருக்குமேயானால்; அல்லது உன்னுடைய குருதேவரிடத்தில் மெய்யான மதிப்பும், மரியாதையும், நம்பிக்கையும் இருந்திருக்குமேயானால்; டில்லியிலிருந்து சென்னை வழியாக திருநெல்வேலி போகும் போதோ, அல்லது திருநெல்வேலியிலிருந்து சென்னை வழியாக டில்லி செல்லும் போதோ, எம்மைத் தேடி நேரில் வந்து உன்னுடைய துன்பங்களுக்கு முடிவுகட்டித் தருமாறு கேட்டிருப்பாய்.

<u>குறிப்பு</u>:- எம்மை மீறித் திருமணம் செய்து கொண்டதால் புதுமணத் தம்பதிகளான நீங்கள் எம்மை வந்து பார்த்து, வணங்கி வாழ்த்துப் பெற வர வேண்டாம் என தடுத்து ஆணையிட்டோம் யாம். **<u>ஏனென்றால், புதுமணத் தம்பதிகளான நீங்கள் எம்மை வந்து வணங்கி வாழ்த்துப் பெற்று விட்டால்; யாம் உங்களுடைய பொருத்தமற்ற, யோகமற்ற, தோல்விக்குரிய, துன்பத்தைத் தரக்கூடிய, குருவாணையை மீறிய, தவறான திருமணத்திற்கு ஒப்புதல் வழங்கியதாகும், ஒப்புதல் வழங்கியதாகும், ஒப்புதல் வழங்கியதாகும்.</u>** மேலும், புது மனைவியோடு எம்மைச் சந்திக்க வரக்கூடிய உன்னையும், உன் திருமணத்தையும், உன் திருமணத்தை நிகழ்த்திய உன் தாயாரையும் குறை சொல்ல நேரிடும்; குற்றம் சொல்ல நேரிடும் என்பதால்தான் உன்னை நேரில் வந்து வாழ்த்துப் பெற வேண்டாம் என்று

தடுத்தோம். இப்பொழுது நீயே அஞ்சல் தொடர்பு உண்டாக்கிக் கொண்டதால்தான்; இவ்வளவு விரிவாக உன்னுடைய திருமணம் பற்றிய விளக்கங்களை எழுத நேரிட்டு இருக்கிறது. இது உன்னுடைய தாயாரைக் குறை கூறியதாகவோ, அல்லது குற்றம் சாட்டுவதாகவோ அமைந்து விடக் கூடாது! அமைந்து விடக் கூடாது! அமைந்து விடக் கூடாது! அமைந்து விடவே கூடாது! அமைந்து விடவே கூடாது!! அமைந்து விடவே கூடாது!!! ஏனென்றால், **நடந்து விட்ட தவறுக்கு, தோல்விக்கு, துன்பத்துக்கு, ... நீயோ, உன் தாயாரோ மட்டும் பொறுப்பில்லை. உங்களை குருவாணையை மீறிச் செயல்படுவதற்கு ஊக்குவித்திட்ட முத்தையா, சேவுகன், விதி, ஊழ்வினை, நாள் கோள் மீன், ... முதலியவை அனைத்துமே, அல்லது முதலியவர்கள் அனைவருமே பொறுப்பாவார்கள்! பொறுப்பாவார்கள்! பொறுப்பாவார்கள்!**

11) எனவே, அன்பு மகனே, நடந்தைவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனிமேல், நடக்க இருப்பவைகள் நல்லனவையாக அமையட்டும். அதற்கேற்ற வண்ணம் நீ தாராள மனத்துடன் உன்னுடைய சிக்கல்கள், துன்பங்கள் முதலிய அனைத்தையும் பற்றிய முழுமையான விவரங்களை எழுதி அனுப்பிடு. முடிந்தால் அடிக்கடி நேரில் வந்து விளக்கிடு. அவற்றை முறையாக ஆராய்ந்து என்னென்ன பரிகாரங்கள் செய்ய வேண்டுமோ, அவற்றை யெல்லாம் செய்து விடலாம். அவற்றின் பிறகே உன்னுடைய திருமணம் பற்றிய முடிவுகளை எடுக்கலாம். கவலைப்படாதே! இந்த அஞ்சலை நீ பல தடவை திருப்பித் திருப்பிப் படித்திடு. உன்னுடைய தாயாருக்கும் பலமுறை படித்துக் காட்டு. என் மீது உள்ள கோபம், வருத்தம் முதலியவை நீங்கட்டும்.

12) அன்பு மகனே! நான் வேலையிலிருந்து ஓய்வு பெற இன்னும் இரண்டே ஆண்டுகள் இருக்கின்றன. அதற்குள் ஒரு சில பொருளாதார

திட நிலைமைகளை வீட்டுக்கும், மடத்துக்கும், கழகத்திற்கும் ஏற்படுத்த வேண்டும். இதுபற்றி உன்னோடு கலந்து பேச வேண்டும்.

13) நான் எழுதி வைத்துள்ளவைகளில் குறிப்பிட்ட சில நூல்களாவது; என்னுடைய வாழ்நாளுக்குள் அச்சாகி தமிழர்களுக்கு மட்டுமாவது கிடைத்தாக வேண்டும். அப்பொழுதுதான், இராமகிருட்டிணருடைய கருத்துக்களைப் போல், அரவிந்தருடைய கருத்துக்களைப் போல்; என்னுடைய கருத்துக்கள் புத்தகங்களின் வடிவிலும்; சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் என்ற வடிவங்களிலும் **தமிழ்நாடு முழுவதும் உலா வர முடியும்**. முடிந்தால், இந்தியா முழுவதும் எம் காலத்திற்குள்ளேயே எம்முடைய நூல்களும், யாம் உருவாக்கும் ஆண்களும் பெண்களும் மூலைமுடுக்கெல்லாம் சுற்றி வந்து **புத்தர் நெறியைப் பரப்பியது போல், எம்முடைய மூதாதையரின் சித்தர் நெறியைப் பரப்ப வேண்டும்**. அப்பொழுதுதான் நாம் எதிர்பார்க்கின்ற பொற்காலம் இந்தியாவுக்கே உண்டாகும்.

**குறிப்பு**:- எமது சித்தர் நெறி இந்தியாவுக்கு மட்டும் உரியது அல்ல. இந்த உலகம் முழுவதற்கும் உரியதாகும். அதாவது, இந்த உலகில் உள்ள மதப் பிரிவினைகள், நாட்டுப் பிரிவினைகள், இனப் பிரிவினைகள், மொழிப் பிரிவினைகள், ... முதலிய அனைத்துப் பிரிவினைகளும்; இப்பிரிவினைகளால் உண்டாக்கக் கூடிய சண்டை சச்சரவுகள், போட்டிப் பொறாமைகள், போராட்டங்கள், போர்கள், அழிவுகள், கலக்கங்கள், குழப்பங்கள், கவலைகள், ... முதலியவைகளும் முழுமையாகச் சரி செய்யப்படும்! சரி செய்யப்படும்! சரி செய்யப்படும்! அதாவது தீர்த்து வைக்கப்படும்! அதற்காகவே யாம் தோன்றியிருக்கிறோம் என்ற நம்பிக்கை எமக்குப் பால் குடிக்கின்ற பருவத்திலிருந்தே மிகமிகத் தெளிவாக, வளமாக, வலிமையாக இருந்து வருகிறது! இருந்து வருகிறது! இருந்து வருகிறது! எனவேதான், யாம், உன்னுடைய தாயார் போன்று எண்ணற்றோர் குறை கூறி குற்றம் சாட்டி, பழி

சுமத்திய போதும், யாம் எள்முனையளவு கூட கவலைப்படாமல் எம்முடைய பணிகளை தொடர்ந்து விரைவாகச் செய்து வருகிறோம். இவை பற்றி நீ எல்லோரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

14) அன்பு மகனே! நான் எந்தக் காரணத்தை முன்னிட்டும் சுயநலத்தோடு செயல்பட வில்லை! செயல்பட வில்லை! செயல்பட வில்லை! செயல்படவே இல்லை! என்னுடைய (a) 'கடலோடி வாழ்க்கை', (b) 'காடோடி வாழ்க்கை', (c) 'நாடோடி வாழ்க்கை', (d) 'அண்டபேரண்டப் பயண வாழ்க்கை', (e) 'அருவ வாழ்க்கை', (f) 'அருவுருவ வாழ்க்கை', (g) 'உருவ அருவ வாழ்க்கை', (h) 'உருவ வாழ்க்கை', ... எனப்படுகின்ற பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கைகளை 'தெய்வீகச் சோதனையாக' (The Test of Divinity) நடத்தி வருகின்றேனே தவிர, எந்தவிதமான தயக்கமோ, மயக்கமோ, கலக்கமோ, குழப்பமோ, தடுமாற்றமோ, அச்சமோ, கூச்சமோ, இச்சையோ, மறைவோ, குறைவோ, ... இல்லாமல் நான் நினைத்தபடிதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

எனவே, உனக்கும், உன் மனைவிக்கும், மாமனாருக்கும், மாமனார் குடும்பத்தார்களுக்கும், மற்ற உறவினர்களுக்கும், உன் குடும்பத்தவர்களுக்கும், உன் வட்டாரத்து மூவர் சன்னிதானங்களுக்கும் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிட்டது இயற்கைதான்! இயற்கைதான்! இயற்கைதான்! ஏனென்றால், நான் எப்பொழுதுமே என்னைச் சாதாரண மனிதனாக நினைத்ததில்லை! நினைத்ததில்லை! நினைத்ததில்லை! நினைத்ததேயில்லை! இப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கவுமில்லை! இனிமேல் நினைக்கவும் மாட்டேன்! எனவே, நான் என்னுடைய சொற்களையோ, அல்லது செயல்களையோ, அல்லது வாழ்வியல் நடைமுறைகளையோ, கொள்கைகளையோ, குறிக்கோள்களையோ எந்தக் காரணம் பற்றியும் மாற்றிக் கொள்ள மாட்டேன்; யாருக்காகவும் மாற்றிக் கொள்ள மாட்டேன்! இந்தப் பேருண்மையினை உன்னைப் போன்று ஒரு சிலராவது நன்கு புரிந்து கொள்ள வேண்டும்! நன்கு

புரிந்து கொள்ள வேண்டும்! நன்கு புரிந்து கொள்ள வேண்டும்! அப்பொழுதுதான் புத்தருக்கும், புத்தர் நெறிக்கும் ஏற்பட்ட கதிகள் எமக்கும், எமது சித்தர் நெறிக்கும் ஏற்படாமல் இருக்கும்! ஏற்படாமல் இருக்கும்! ஏற்படாமல் இருக்கும்!

15) அன்பு மகனே! நீ இந்தக் குறுகிய கால வாழ்க்கைக்குள் மனித வாழ்வின் சொந்த பந்தங்கள், பற்றுப் பாசங்கள், வெற்றி தோல்விகள், இன்ப துன்பங்கள், நல்லவைகள், தீயவைகள், பழி பாவங்கள், வருத்தங்கள், ... முதலியவைகள் பற்றி மிக மிகப் பெரிய அளவில் புரிந்து கொள்ளும் வாய்ப்பு வசதிகளைப் பெற்று விட்டாய்! வசதி வாய்ப்புக்களைப் பெற்று விட்டாய்! வசதி வாய்ப்புக்களைப் பெற்று விட்டாய்! எனவே **<u>இப்பொழுதாவது; இனிமேலாவது; இந்த மனித வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடு! இந்த மனித வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடு! இந்த மனித வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடு!</u>**

16) அன்பு மகனே! அண்டபேரண்டங்களை ஆளுகின்ற பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான; அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்து வேத நூல்கள் முன்னூற்றுத் தொண்ணூற்றாறையும் (396); இந்து மத நூல்கள் முப்பத்தாறையும் (36); இவை சார்ந்த பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதி வருகின்ற குரு பாரம்பரியங்களையும், இலக்கிய பாரம்பரியங்களையும், அரச பாரம்பரியங்களையும், ... முறையாக உரிய அளவு நாடெங்கும் குருகுலங்கள், திருகுலங்கள், தருகுலங்கள் ... முதலியவைகளைத் தோற்றுவித்து வெளியிட வேண்டும்! வெளியிட வேண்டும்! வெளியிட வேண்டும்! என்பதே எமது செயல்திட்டம். எம்முடைய ஒவ்வொரு மூச்சும், பேச்சும், சொல்லும், செயலும் 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும்', 'உலக சமத்துவ சகோதரத்

தத்துவ பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்பதற்காகவும்’, ‘மானுட இனம் அருளுலகச் செல்வங்களை முறையாகவும், நிறைவாகவும் துய்ப்பதற்காகவும்’ மட்டுமே செயலாகின்றன! செயலாகின்றன! செயலாகின்றன!

17) அன்பு மகனே! இந்து வேதமும், இந்துமதமும்தான்;

a) ‘கடவுள்கள் மனிதர்களைச் சந்திக்கிறார்கள்’;

b) ‘மனிதர்கள் கடவுள்களைச் சந்திக்கிறார்கள்’;

c) ‘கடவுள்கள் மனிதராகப் பிறக்கிறார்கள்’;

d) ‘மனிதர்கள் கடவுள்களாக மாறுகிறார்கள்’;

e) ‘கடவுள்களுக்கும் பிறப்பு உண்டு; இறப்பு உண்டு; பிறப்பிறப்பற்ற பெருநிலை உண்டு’;

f) ‘கடவுள்களில் ஆண்மை நிலையினர், பெண்மை நிலையினர், அலி நிலையினர் என்று மூன்று வகை உண்டு’;

g) ‘மனிதர்களைக் கடவுளாக்கும் பூசைமொழி உண்டு; பூசைவிதி உண்டு, தத்துவம் உண்டு, செயல்சித்தாந்தம் உண்டு’;

h) ‘கோயில்களில் இருக்கின்ற கடவுள்களுக்குச் சத்தியைத் தருகின்ற குடமுழுக்குப் பூசைமுறை உண்டு’;

... என்ற தனிப்பட்ட சிறப்பான கருத்துக்களைக் கூறுகின்றன. இவற்றையெல்லாம் உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்ற நினைப்பிலேதான் இரவு பகலாக வாழ்ந்து வருகிறேன் நான். இதைத் தவிர எனக்கு எந்தவிதக் கவலையும் கிடையாது என்பதை; உன்னைப் போன்று விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு கணிசமானவர்களாவது புரிந்து கொள்ள வேண்டும். அதற்காகவே, நான் விரைவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் வாழ்நாள் முழுவதும் கிராமம் கிராமமாக, ஊர் ஊராகச் சுற்றி வருவதற்குரிய திட்டங்களைத் தீட்டியுள்ளேன். இதற்கு நீயும், உன் மூலம் பலரும் தேவையான

எல்லாவகையான ஏந்துகளையும், உதவிகளையும், துணைகளையும், வசதி வாய்ப்புக்களையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், ... உருவாக்கித் தர வேண்டும்! உருவாக்கித் தர வேண்டும்! உருவாக்கித் தர வேண்டும்!

இதற்காகவே, 'பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை' (The Pathinen Siddhar Madam Trust) என்ற நிறுவனத்தை அரசாங்கப் பதிவு (Government Registration) செய்துள்ளேன். எனவே, பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் 'பதினென்சித்தர் மடம் அறக்கட்டளை' என்று தமிழிலோ அல்லது 'The Pathinen Siddhar Madam Trust' என்று ஆங்கிலத்திலோ பெயரிட்டு Draft அல்லது Cheque அனுப்பினால் அது பொன்னேரி State Bankஇல் மாற்றிக் கொள்ளப்படும். அதாவது அறக்கட்டளையின் வங்கிக் கணக்கு, பொன்னேரி பாரத வங்கியிலேயே இருக்கின்றது.

18) 'பதினெண் சித்தர் திருச்சபை' என்ற பெயரில் 80(G) வருமானவரி விதிவிலக்கு பெற்று ஒரு நிறுவனம் அரசாங்கப் பதிவு பெற்றிருக்கிறது. இது தொடர்பான அச்சிட்ட அறிக்கை இத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது. எனவே, இந்த 80(G) மூலம் பதினெண்சித்தர் திருச்சபைக்கு நன்கொடை தரக் கூடியவர்களை உன்னால் முடிந்த வரை உருவாக்கிக் கொடு. இதற்காகப் பெருமுயற்சிகளை எடுத்துக் கொள்.

19) அன்பு மகனே! மிக விரைவில் உன்னுடைய விரிவான பதிலைக் கண்டு உனக்கு என்னிடத்திலும், என்னுடைய நிறுவன நிர்வாகங்களிடத்திலும், பணிகளிலும் ஏற்படக் கூடிய நம்பிக்கையையும், அக்கரையையும், ஆர்வத்தையும் பொறுத்து எமது வெளியீடுகளை அனுப்பி வைக்கிறோம். ஏனென்றால், யாம் அச்சுறுத்தியோ, இச்சகம் பேசியோ, வற்புறுத்தியோ எமக்கு ஆதரவாளர்களைத் திரட்ட விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவில்லை! விரும்பவே இல்லை! எனவேதான் யாம் எம்மிடத்து நம்பிக்கையும், விருப்பமும், அக்கரையும், ஆர்வமும் இல்லாதவர்களுக்கு எம்முடைய வெளியீடுகளை

அனுப்பிடுவதில்லை! அனுப்பிடுவதில்லை! அனுப்பிடுவதில்லை! எனவே உன்னுடைய பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

உன்னுடைய ஏற்புத் தந்தை
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,**
**இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை,**
**தலைவர், குருதேவர்,**
இந்து முன்னேற்றக் கழகம்,
இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
அருட்பணி விரிவாக்கத் திட்டம்.
26-4-1993.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: மதுரை சித்தரடியார் திரு சு. இராசு நாயுடு அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

# அருள்வாக்கு தொகுதி

# திருமடல்

தலைமைப்பீடம்,
17-10-1993.

உயர்திரு சமயக்குரவர் நால்வர் சன்னிதானம், சித்தரடியார் த. கேசவன், சித்தர் வேதகண நாதர் அவர்களுக்கு; தலைமைப்பீடத்தில் பணியாளராக இருக்கும் அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியார் வேம்பை சீ. மணி சித்தர் யோகமுனி அன்போடு வரையும் நலம் நாடும் திருவோலை.

1. தாத்தாக்கள், ஆத்தாக்கள் அருளாலும், அம்மையப்பன்களின் துணையாலும் தங்களுக்கும், தங்களது குடும்பத்தார்களுக்கும் எல்லாவிதமான நன்மைகளும், பாதுகாப்புகளும் உண்டாகுமாறு பூசையில் வேண்டி குருதேவரின் ஒப்புதலோடு திருநீறு & குங்குமம் இத்துடன் இணைத்து அனுப்பி இருக்கிறேன். இதனை, இது பெற்றது முதல் ஒன்பது (9) நாட்களுக்கு, இதனுடன் சிறிது திருநீறு, குங்குமம் கலந்து அன்றுடம் காலையிலும், இரவு படுக்கப் போகும் போதும் தண்ணீரில் குழைத்து வழக்கம் போல் பூசிக் கொள்ளவும்.

2. அருட்போர் வியூக நாயகம் என்ற முறையில், குருதேவர் நமது இயக்கத்தவர்களோடு நேரடி தொடர்பு வைத்து, எல்லோருக்கும் செயல் ஊக்க ஆக்கத் திருமடல்களை எழுதுமாறு பணித்துள்ளார். அதன்படிதான், இத்திருமடல் தீட்டப்படுகிறது. மேலும், தலைமைப்பீடத்தில்தான் அசுரவேத யாகசாலை இருக்கிறது என்பதால்; முதன்மையானவர்களுக்கு தேவைக்கேற்ப பூசை செய்தும், சக்கரங்கள்

அனுப்பியும், அருட்போருக்கு ஆயத்தம் செய்ய வேண்டிய பொறுப்பும் எம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. எனவேதான், யாம் அசுரவேத யாகசாலையில் அருளேற்றப்பட்ட திருநீறு & குங்குமத்தை தங்களுக்கு அனுப்பியிருக்கின்றேன். எதுவானாலும், குருதேவர், வெள்ளிக்கிழமையில் வீடு வந்தபிறகு நான் எழுதியிருப்பதை, நான் தயாரித்து வைத்திருக்கும் திருநீறு & குங்குமத்தை குருதேவரிடம் கொடுத்து வாழ்த்தி தரச் சொல்லித்தான் அனுப்புகின்றேன். எனவே, நானாகவே செயல்படுவதாக யாரும் எதையும் நினைத்துவிடக் கூடாது.

3. குருதேவர் அவ்வப்பொழுது அருள்வாக்காக நமது கழகத்தார், இயக்கத்தார் பற்றி கூறுகின்ற கருத்துக்களை கூடுமானவரை, அவருடைய சொற்களாகவே குறித்து வைத்துக் கொண்டும்; ஒப்புதல் குருதேவரிடம் பெற்று பிறகு வாய்ப்பு வரும் பொழுது அவரவருக்கு அஞ்சல் அனுப்புகின்றேன். இதன்படியே, அண்மையில் திருச்சி, கரூர், புலியூர் சிமெண்ட் பேக்டரியில் வேலைபார்க்கும் மதுரையைச் சேர்ந்த திரு செயபாலகிருட்டிணன் எஞ்சினியர். இவர் நமது குருதேவரின் இரண்டு இளவரசுகளுக்கும், கரூர் பாட்டி சோழியாயி கோயிலில் திருமுடி நீக்கி காதுகுத்து விழாவின்போது, குருதேவரின் குடும்பம் தங்கி இருக்க எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்திருந்தார். இப்பொழுது சுமார் பத்து ஆண்டுகளுக்கு பிறகு அண்மையில் கரூர் நாட்டடராயர் கோயில் சென்ற போது எதிர்பாராமல் சந்தித்ததால் தனது காதல் திருமணம் மனைவியையும் கலந்து பேசி திடீரென்று நேரில் வந்து குருதேவரை சந்தித்தார்.

அப்பொழுது, அவருக்கு குருதேவர் கூறிய அருள்வாக்குக்கிடையில் தங்களைப் பற்றியும் அதாவது, தாங்களும் மதுரையைச் சேர்ந்தவர் என்பதினால் அருள்வாக்கில் நிறைய கூறப்பட்டது. அதாவது, குருதேவர் தங்களைப் பற்றி நிறைய நினைக்கிறார் என்று தெரிகிறது. உலகியல் காரணமாகவோ (அ) அருளுலக சோதனை காரணமாகவோ நமது

குருதேவர் எதிர்பார்க்கின்ற செயல்களை தங்களால் செய்ய முடியாமல் போய்விடுகின்றது என்பதை நான் உணர்ந்தேன். எனவே, அருட்போர் வியூக நாயகம் என்ற முறையில், தாங்கள் இந்துவேதம் பரப்பும் நாயகம் என்று இருப்பதால், தங்களுக்கு இந்த அருள்வாக்குத் தொகுப்பினை என் நினைவுக்கு வந்த வண்ணம் எழுதுகிறேன். இதில் தொடர்ச்சி இருக்காது. **இது ஓர் அருள்வாக்குத் தொகுப்பு மடல்.** அவ்வளவுதான்.

4. நாம் குருதேவர் எதிர்பார்க்கின்ற அளவிற்கு தேவையான அளவு எண்ணிக்கையுடையவர்களாக உருவாகிவிட்டோம். ஆனால், போதுமான எண்ணிக்கை உடையவர்களாக வளரவில்லை. நமக்கு ஒரு சில புதியவர்களாவது இந்த ஓராண்டுக்குள் அதாவது குருதேவருடைய 58வது வயதுக்குள் தயாரிக்கப்பட்டாக வேண்டும். இதற்காக அருட்போர் வியூகநாயகங்கள், இந்துவேதம் பரப்பும் நாயகங்கள், அருட்பணி விரிவாக்கத் திட்ட நாயகங்கள், மண்டல நாயகங்கள்.... என்று பல நாயகங்களை உருவாக்குவதற்கு அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா ஆணையிட்டுள்ளார். ஆனால், குருதேவர், உலகியலாக “இப்பொழுது உள்ள நாயகங்களே தங்களுடைய பொறுப்பை உணர்ந்து உலகியலை வென்று செயல்படக் கூடிய ஊக்க ஆக்கப் பக்குவ நிலைகளை எய்தவில்லை! இந்நிலையில் இன்னும் பல நாயகங்களை உருவாக்கி என்ன பயன்!?” என்று அருள்வாக்காக கூறினார்.

5. அடுத்து குருதேவர் குறிப்பிடுகையில், “நாயகமாக இருக்கின்றவர்கள் குருதேவர் முக்காலத்தையும் உணரும் வல்லவர் என எண்ணிப் பாராமல்; எடுத்தோம், கவிழ்த்தோம் என்று பல்வேறு நெஞ்ச நிலைகளில், சிந்தை நிலைகளில் அஞ்சல் எழுதுகிறார்கள். அந்த அஞ்சலைப் பார்த்தவுடனேயே அவர்களைப் பற்றி நிறைய தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, என்ன பதில் எழுதுவது,

எழுதினால் என்னவாகும், என்று எண்ணியே யாரையாவது பதில் எழுதச் சொல்ல வேண்டியிருக்கிறது” என்று அருள்வாக்காக கூறினார்.

6. “நாயகமாக இருப்பவர்கள், தங்களுடைய கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்றையும் அறிந்தவர் குருதேவர்; தங்களுடைய முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய மூன்றையும் அறிந்தவர் குருதேவர். எனவே, நாம் நம்மால் முடிந்தவரை முழுமூச்சாக அருட்போருக்காகவும், அருளாட்சி அமைப்புக்காகவும், உடல் உழைப்பு, பொருள் உழைப்பு, உற்றார் உறவினர் இணைப்பு உழைப்பு, ஊரார் நண்பர் முதலியோரின் பொருட்கொடை திரட்டல் என்று செயல்படுவோம். நமது ஆக்க ஊக்க செயல்களால் குருதேவர் வழியாக தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் நம்மைக் காக்க நமக்கு உதவ விரைந்தோடி வருவார்கள்.... என்ற நம்பிக்கையுடன் செயல்பட இன்னும் பக்குவப்படவில்லை. இந்நிலையில் அஞ்சலில் கண்டித்தோ, நேரில் கண்டித்தோ நாயகமாக இருப்பவர்களை செயல்பட செய்து ஆகப்போவது ஒன்றுமில்லை. தானாக கனியாத கனியை தடி கொண்டு அடித்தா கனிய வைக்க முடியும். அப்படி கனிந்தாலும் அது பயன்படவா போகிறது....” என்று அருள்வாக்காக கூறினார்.

7. “குருதேவர் இந்து வேதம் பரப்புகின்ற பணி 59வது வயது பிறப்பதற்குள் ஓர் உச்சக்கட்ட நிலையை அடைந்தேயாக வேண்டும் என்று பரபரப்பில், விறு விறுப்பில் செயல்படுகிறார். எந்தவித பொருள் வசதி இல்லாத நிலையில் கடனாளியாக இருக்கின்ற துரையையும், செகதீசனையும் மேலும் கடன் வாங்கி அவசர அவசரமாக புத்தகங்களை அச்சடித்தும் அறிக்கை அச்சிட்டும் அவற்றை கன்னியாகுமரி முதல் சென்னை வரை பல இடங்களுக்கு நேரில் சென்று கொடுத்தும் செயல்படச் செய்து வருகிறார் குருதேவர். குருதேவரும் தன்னுடைய உலகியலான கட்டுப்பாடுகளையும் தளர்த்திக் கொண்டு, அருளுலகத்தாரிடம் அடிக்கடி தொடர்பு கொண்டு பொருள்

பெற்றுச் செயல்படுகிறார். ஏனென்றால், அடுத்த ஆண்டு குருதேவர் ஓய்வு பெற்றதும் நேரடியான பொது வாழ்க்கைக்கு வருகிறார். அப்பொழுது எப்படியும் பலரின் அறிமுகம் கிடைக்கும். எப்படியும் தேவையான பொருள் வசதி பலரால் ஏற்பட்டுவிடும்.

எனவே, இன்றைய சூழ்நிலையில் தன்னை சுற்றியுள்ளவர்கள் ஓரளவு தியாக உள்ளத்துடன், தாராள மனதுடன் உடல் உழைப்பையும், பொருளையும் வழங்கி செயல்பட்டால் நல்லது என்று எதிர் பார்த்து பக்குவமுடையவர்களை மட்டும் ஆணையிட்டே செயல்படச் செய்கிறார். இதுபற்றி பாலசுப்பிரமணியத்திடம் பேசும் பொழுது:-

"பழம்பிறப்புக்களை உணர்ந்தவர்கள், மிகப்பெரிய பொறுப்புகளை பெற்றிருப்பவர்கள் இன்னும் மலர்ந்தும் மலராத மலர்களாகவே இருக்கின்றார்கள். கனிந்தும் கனியாத கனியாக இருக்கின்றார்கள். இன்றைய அவசர தேவைக்கு, வள்ளுவர் சொல்லுவது போல், காலத்தில் செய்யப்படும் சிறிய உதவி, இந்த ஞாலத்தை விட பெரியது என்பதை உணர்ந்து நம்மிடம் இருப்பவர்கள் செயல்பட முன்வரக் கூடிய காலம் எப்பொழுது வருமோ தெரியவில்லை.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் இந்து வேதமும், இந்து மதமும் சிலவாயிரம் ஆண்டுகளாக சிதைந்து சிக்கலுற்று சீரழிந்து கிடக்கின்றன. இந்து வேத விடுதலை சிங்கங்களையும், இந்துமத விடுதலை சிங்கங்களையும் உருவாக்கி வருகிறோம். இவர்கள், யாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு உரியவர்களாகிவிட்டால், தமிழக அளவில் மட்டுமல்ல, இந்திய அளவிலேயே மிகப்பெரிய சாதனைகளை சாதித்துக் காட்ட முடியும்.

ஆனால், யாமே, முழுமையாக பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு முன்னால், இன்றைய நிலையில் எம்மோடு இருப்பவர்கள்தான் என்றென்றைக்கும் கட்டிடத்தின் அடிப்படை போன்று செயல்படக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதை உணர்ந்துதான் இன்றைக்கு

எம்மிடம் உள்ளவர்களில் பலரை வெட்டிவிட்டு விட்டோம். சிலரை தட்டிப் பார்த்து, தட்டிப் பார்த்து கண்டித்துக் கொண்டிருக்கிறோம். சிலரை அவர்களின் போக்கிலேயே விட்டுவிட்டோம். இப்படி விட்டுவிடுவதால் அவர்கள் வெகுவேகமாக எம்மை தேடி வந்து ஒட்டிக் கொண்டாலும் ஒட்டிக் கொள்ளலாம், அல்லது சட்டி சுட்டது கை விட்டது என்பது போல், குருதேவரை விட்டு விலகுவதற்கு இதனையே தங்களுக்கு கிடைத்த அரிய பெரிய வாய்ப்பாகவும் ஆக்கிக் கொள்ளலாம்.

ஆக, 10.10.1993 முதல் 10.10.1994க்குள் இந்த 58வது வயதில் எவ்வளவு பேர் விலக்கப்பட்டும், விலகியும், அகன்று விடுகிறார்களோ அதுதான் உண்மை. எது வரினும், எதைக் கொடுத்தாவது, எதை இழந்தாவது நான்கு யுக நாயகத்தோடு, பரபிறம்மத்தோடு, எல்லாம் வல்ல சித்தரோடு இணைந்து இரண்டறக் கலந்து விடுவோம் என்று எம்மோடு நிற்பவர்கள்தான் பொருளுலகிலும், அருளுலகிலும் என்றென்றும் உய்வையும், துய்ப்பையும் பெறக் கூடியவர்களாவார்கள்.

எனவேதான், யாம் இப்பொழுது கூடுமானவரை தயக்கம், மயக்கம், தானென்ற உணர்வு உடையவர்களை எல்லாம் மறுசிந்தனை செய்து கொள்வதற்கு உரிய வாய்ப்பு வசதிகளை, அதாவது எமது கண்டிப்புக்களை பல கோணங்களில், பல நிலைகளில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, எத்தனை பேர் மிஞ்சுவார்கள் என தெரியவில்லை! முற்பிறவியின் பயனாக, மிகப்பெரிய பதவிகளை பெற்றவர்கள் எல்லாம் இப்பிறவியின் சூழல்களால், ஆசைகளால், மயக்கங்களால் என்ன ஆவார்கள் என்ற நிலையை பெற்றிருக்கிறார்கள்....”

என்று அருள்வாக்காக கூறினார்.

8. “இன்றைய இந்திய அரசியல் நிலைகள், மாநில அரசின் நிலைமைகள், தமிழக சமுதாய நிலைகள் .... முதலியவைகள் எல்லாம் புதிய ஒரு தலைவர் தேவை, புதிய ஓர் தத்துவம் தேவை என்று

பேய்க் கூச்சல் போடுகின்றன. புயற்கால கடல் அலைகள் போல்; மக்களின் கவலைகள், தொல்லைகள், தோல்விகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், எதிர்பாராத முடக்கங்கள், வீக்கங்கள்.... முதலியவைகளால் பேரிரைச்சலோடு தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கின்றன. சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில்துறைத் தலைவர்கள் அனைவருமே; தங்கள் தங்களால், தங்கள் தங்களுடைய குடும்பத்தாருக்கும், சுற்றத்தாருக்கும் எவ்வளவு பொருளையும், புகழையும் சேர்க்க முடியுமோ அவ்வளவும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வெறியில், காட்டுத் தீ போல் அனைத்தையும் தங்களுக்குரியவைகளாக் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், யாம் செயல்பட்டிட்டால்தான், இந்து வேத முன்னேற்ற கழகம் (இ.மு.க.) இந்திய அரசாங்கத்தை ஆளும். இந்துவேதம்தான் இந்தியாவின் சட்டமாகும். எல்லா போலிகளையும், காலிகளையும், கூலிகளையும், அன்னியருக்காக பயன்படும் வேலிகளையும் இந்துமத விரோதிகளையும், துரோகிகளையும் எதிர்த்து போராட இதற்கு மேலாவது, இனிமேலாவது, யாம் உருவாக்கி இருப்பவர்களில் மிகப்பெரிய பொறுப்புக்களில் இருப்பவர்கள், <u>தங்களை உணர்ந்து அதன்மூலம், தலைவனை உணர்ந்து செயல்பட வேண்டும், அல்லது தலைவனை உணர்ந்து அதன்மூலம் தங்களை உணர்ந்து செயல்பட வேண்டும்</u>. 'தன்னையறிந்தால் தலைவனையறியலாம்', 'தலைவனை அறிந்தால் தன்னையறியலாம்' - என்ற குருபாரம்பரிய வாசகத்தை மிகப் பெரிய பொறுப்புக்களில் உள்ளவர்கள் கூட புரிந்து செயல்பட முன்வர வில்லை. இது எதில் போய் முடியும் என தெரியவில்லை. எனவே, மிஞ்சுகிறவர்கள் மிஞ்சட்டும். அவர்கள் கொஞ்சமாவது உணர்ந்து செய்யக்கூடிய செயல்கள், அவர்களுக்கு அருளுலக சக்தி சித்திகள் கிடைக்கும். குருவருளால் முத்தியும் சித்திக்கும். செக்குமாடாக, குப்பையைக் கிளறும் கோழியாக, கூண்டுக் கிளியாக எவ்வளவு

காலம் வாழப் போகிறீர்கள், சிந்தியுங்கள்.....” என்று அருள்வாக்காக கூறினர்.

9. குருதேவர், “யாம் விரும்புவதெல்லாம் எம்மிடம் இருப்பவர்கள் தங்களுடைய பொறுப்புக்களை உணர்ந்து தங்களால் முடிந்தவரை, தங்களுக்கென்று உலகியலாக உள்ள செல்வம், செல்வாக்கு, மதிப்பு, மரியாதை, அதிகாரம், படிப்பு, சொந்தம், .... முதலிய பெருமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்காமல், தொண்டனுக்கு தொண்டனய், அடியாருக்கு அடியாராய், வேட்டை நாய் திக்குத் தெரியாத காட்டுக்குள் மோப்பம் பிடித்து வேட்டைக்குரிய விலங்கை தேடிப் பிடிக்க செல்வதுபோல்; யாம் உருவாக்கியிருக்கும் சன்னிதானங்கள், மிகப் பெரிய பொறுப்புக்களில் உள்ளவர்கள் தங்களுடைய ஓய்வையும், உறக்கத்தையும் குறைத்துக் கொண்டு சுறுசுறுப்பாக எல்லா இடங்களுக்கும் ஓடியாடி; இந்துவேதப் பற்றுளர்கள், இந்துமத நம்பிக்கையாளர்கள் எங்கெங்கு இருக்கிறர்கள் எனத் தேடிப் பார்த்து அவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டினல் போதும்.... சிறு துளி பெரு வெள்ளம். உங்களுடைய வாய்ச்சொல் போதும். குருதேவர் பற்றியும், நமது இயக்கம் பற்றியும் கூறுங்கள். முடிந்தால் உங்கள் உடல் உழைப்பை தாருங்கள். குருதேவரின் அறிக்கைகளை பல இடங்களில் வழங்குங்கள். குருதேவரின் புத்தகங்களை விற்றுக் கொடுங்கள். முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம்... முதலியவைகளை மக்களுக்கு வழங்கி, மக்களுக்கும் நலம் விளைவியுங்கள், பதினெண்சித்தர் மடத்தையும் விளம்பரப் படுத்துங்கள்” என்று அருள்வாக்காக கூறினர்.

10. “... நம்மவர்கள், இன்றுள்ள அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களும் தமிழ்மொழியின் பெயரை சொல்லித்தான் வளர்ந்து இருக்கிறர்கள். தமிழனையும், தமிழினத்தையும், தமிழ்நாட்டையும் காப்பாற்றிக் கொண்டிருப்பதாக கூறிக் கொண்டுதான் வாழ்ந்திருக்கின்றர்கள், வாழ்ந்து வருகிறர்கள். ஆனல், யாருமே,

தமிழுக்கோ, தமிழனுக்கோ செய்ய வேண்டிய தொண்டைக் கூட செய்யவில்லை. எல்லோருமே முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்றார்கள். பிச்சைக்காரர்களாக அரசியலுக்கு வந்தவர்கள், கோடீசுவரர்களாக பல ஆயிரங் கோடிகளுக்கு சொந்தக்காரர்களாக உலா வந்து கொண்டிருக்கின்றார்கள். இதுபற்றி மக்களும் உணர ஆரம்பித்து விட்டார்கள். இந்த நிலையில் யாம் உருவாக்கி உள்ளவர்கள்,

> "இந்து வேதத்தால் தமிழ் வளரும்,
> தமிழால் இந்து வேதம் வளரும்",
>
> "இந்துமதத்தால் தமிழன் உயர்வான்,
> தமிழனால் இந்துமதம் உயரும்",
>
> "இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவில் இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன"

என்ற பேருண்மைகளை அறிவித்து விட்டால் போதும். தமிழ்நாடு, தமிழன், தமிழ்மொழி என்ற மூன்றுமே இந்திய அளவிலும், உலக அளவிலும் மேன்மை பெறும், முதன்மை பெறும், சிறப்பு பெறும், பெருமை பெறும், உரிமை பெறும், தனித்த விடுதலை நிலை பெறும், தன்னிகரில்லாத தலைமையை பெறும். இதுவரை அரசியல் வாதிகளோ, சமய வாதிகளோ, சமுதாய வாதிகளோ, இலக்கிய வாதிகளோ, கலைத் துறையினரோ, தொழில் துறையினரோ தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் தேடித் தர முடியாத மிகப்பெரிய தனித்துவம் பெற்ற உரிமைகளையும், பெருமைகளையும் தமிழ்மொழிக்கும், தமிழகத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் நம்மால்தான் உருவாக்கித் தர முடியும்! உருவாக்கித் தர முடியும்! உருவாக்கித் தர முடியும்! இது உறுதி! இது உறுதி! இது உறுதி!

எனவேதான், தமிழர் ஏன் ஒற்றுமைப்படவில்லை, தமிழர்களை ஏன் ஒற்றுமைப்படுத்த முடியவில்லை என்ற ஆராய்ச்சிகளை முறையாக

செய்து முடிவு கண்டு செயல்படப் புறப்பட்டிருப்பவர்கள்தான் நாம் என்பதை நம்மவர்களாவது முதலில் உணர வேண்டும். நம்மிடம் தத்துவம் இருக்கின்றது; செயல் சித்தாந்தம் இருக்கின்றது; வரலாறு இருக்கின்றது; இலக்கியம் இருக்கின்றது; செயல்படுவதற்குரிய வழிவகைகள் இருக்கின்றன. நமக்கு அருளுலக, பொருளுலக பாதுகாப்புக்கள் இருக்கின்றன. தாத்தாக்கள் ஆத்தாக்களின் வாழ்த்தும், அருளும், அம்மையப்பன்களின் துணையும் நமக்கு இருக்கின்றன.

நம்மிடம்தான் இன்றைய நிலையில் மேடையில் பேசிட கருத்துக்களும், செய்திகளும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. நம்மிடம்தான் கொள்கையும், குறிக்கோளும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நம்மிடம் உள்ள அடிப்படைத் தொண்டர்கள் உணர்ந்தது கூட பெரிய பெரிய பட்டங்களையும், பதவிகளையும், பொறுப்புக்களையும் வைத்திருப்பவர்கள் உணரவில்லை, உணரவில்லை, உணரவில்லை, உணரவேயில்லை! உணர்ந்து செயல்பட முன்வர தயாராக இல்லை....." என்று அருள்வாக்காக கூறினார்.

இப்படி சித்தர் யோகமுனியாகிய நான் குருதேவர் அருள்வாக்குகளைத் தொகுத்து தங்களுக்கு அனுப்புவதை நம் இயக்கத்தவர்கள் அனைவருக்கும் அனுப்புவதற்கு தாங்களே கூட நிறைய நகல்கள் தயாரித்து எல்லோருக்கும் அனுப்பினாலும் சரி, அல்லது தலைமைப் பீடத்திற்கு அனுப்பினாலும் சரி. ஏனென்றால், குருதேவர் மதுரையை சேர்ந்த செயபாலகிருட்டிணனையும், தங்களையும், மற்ற பொறுப்பில் உள்ளவர்களையும் நினைத்து வருந்தி சிலமணி நேரம் மனம்விட்டு அருள்வாக்காக நிகழ்த்திய உரையாடலில் இருந்து தொகுக்கப்பட்ட அருள்வாக்குகளே இவை. இவை எந்தவொரு தனிமனிதரையும் விமர்சிப்பதாக கூறிவிடக் கூடாது.

இன்றைய நமது நிலையில் தாங்கள் ஒருவர்தான் விரைந்து நல்ல தெளிவான கையெழுத்தில் இதனை நகல் எடுத்து, பிறகு இயந்திர

நகல் அல்லது தட்டச்சு நகல் மூலமோ பல நகல்கள் தயாரிக்க முடியும். என்னுடைய கையெழுத்து எவ்வளவுதான் முயன்றாலும், எல்லோரும் படிக்கின்ற அளவிற்கு தெளிவாக அமையவில்லை. அமைவதில்லை. நானும் முயற்சித்து வருகிறேன். குருதேவரோ அடிக்கடி மருத்துவ விடுப்பு எடுத்துக் கொண்டு இரவு பகலாக இந்துவேதம் எழுதிக் கொண்டு இருக்கிறார். இதற்கிடையில் பல்வேறு வகையான உலகியல் பிரச்சினைகள், சிக்கல்கள்; வாரத்தின் மூன்று நாட்கள் வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும் பொதுமக்களையும் நமது இயக்க கழக உறுப்பினர்களையும் சந்திப்பதற்காக செலவிடுகிறார். இதிலேயே தொலைபேசி செய்திகள், அஞ்சல்களுக்கு பதில்கள், அருட்கணிப்புகள் முதலிய அனைத்தும் செய்ய வேண்டியிருக்கிறது.

குருதேவருக்கு பொருளுதவியும், ஆள் உதவியும் தேவைப்படுகிறது. குருதேவர் வீட்டில் வேலை செய்ய வேலைக்காரி தேவை. குருதேவர் கூற நகல் எழுதக்கூடிய ஆணோ, பெண்ணோ தேவை. குருதேவர் விடுப்பு எடுப்பதால் பற்றாக்குறை ஆகக் கூடிய வருமானத்தை சரிக்கட்ட பொருளுதவி தேவை. ஆனால், இந்தத் தேவைகளை குருதேவர் யாருக்கும் தெரிவிக்க வில்லை. நேரில் வருபவர்கள் மட்டும் தெரிந்து கொள்கிறார்கள். எனவேதான், தலைமைப்பீடத்தில் பணியாற்றும் நான் இதுபற்றி இந்த அஞ்சலில் குறிப்பிடுகின்றேன்.

இன்றைய நிலையில் இந்து வேதங்களை ஒரு மெசின் வாங்கி (கையெழுத்து பிறதி நகல் எடுக்கும் இயந்திரம்) ஒவ்வொன்றிலும் <u>நூறு நூறு புத்தகமாவது தயாரித்து நம்முடையவர்களிடம் கொடுத்து அவரவர் படித்துத் தெரிந்து கொள்ளவும், அவரவர் செல்லக்கூடிய இடங்களில் சந்திப்பவர்களுக்கும், அவர்களை சந்திக்க வருபவர்களுக்கு படித்துக் காட்டி இந்து வேதம், இந்து மதம் பற்றிய கருத்துக்களை பரப்பினால் இந்தியாவுக்குள் மட்டுமல்ல, இந்த உலகிலேயே வேறு</u>

<u>வேதங்களோ அல்லது மதங்களோ இல்லாத ஒரு நிலை உருவாகிவிடும்</u>. அதன் மூலம்தான்,

i) 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்',

ii) 'உலக சமத்துவ, சகோதரத் தத்துவப் பொதுவுடமை கூட்டுறவு சமுதாயத்தை அமைத்திட முடியும்',

iii) 'உலக சமாதானம், ஒற்றுமை, நிம்மதி, நிறைவு, மகிழ்வு, மானுடப்பற்று, மானுடஅன்பு, மானுடப்பண்பு... முதலியவைகளை பசுமையாக முளைத்து, கிளைத்து, தழைத்து, செழித்து வளர்ந்து இனிமையான நன்மை தரும், பயன்களை வழங்கிடும் படிச் செய்திட முடியும்'.

11. இப்படி நான் எழுதியுள்ள இந்த நெடிய அஞ்சல் எனக்குள்ள பல்வேறு வகையான அலுவல்களுக்கிடையில் மிகப் பெரிய முயற்சியால் உருவான ஒன்றாகும். இதற்குரிய பயன் ஏற்பட வேண்டும் என்று அடியேன் விரும்புகின்றேன். இந்த அஞ்சலை தாங்களும் பலமுறை படிப்பதோடு, பலருக்கும் படித்துக் காட்டுங்கள். இதுவரை தங்களிடம் நகல் எடுக்கும்படி கூறப்பட்ட எல்லா அஞ்சல்களையும், காலக் கணக்கீட்டு அடிப்படையில் தொகுத்து 2, 3 தொகுதியாக பைண்டிங் செய்து பூசையில் வையுங்கள். இதுவரை உங்களால் நகல் எடுக்கப் பட்டவைகளில் ஒரு சில நகல்கள் இருந்தால் அவைகளையும் தனித்தனித் தொகுதிகளாக பைண்டிங் செய்து உங்களால் நகல் எடுக்கப்பட்டவை என்ற குறிப்பை எழுதி நான்கு மண்டலத்திற்கும், தலைமைப் பீடத்திற்கும் அனுப்பி வைத்தால் அவை மிகச் சிறந்த வரலாற்றுச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் அமையும்.

உங்களுக்கு எண்ணற்ற பணிகள் காத்திருக்கின்றன! காத்திருக்கின்றன! காத்திருக்கின்றன! குறிப்பிட்ட சில பணிகள் உங்களுக்காகவே தேங்கிக் கிடக்கின்றன! கிடக்கின்றன! கிடக்கின்றன! என்பதை தலைமைப்பீடத்தில் உள்ள என்னால் முழுமையாக உணர

முடிகின்றது! உணர முடிகின்றது! உணர முடிகின்றது! அந்த உணர்வின் உந்துதலால்; அந்த உணர்வு ஏற்படுத்திய வற்புறுத்தல், உறுத்தல், உணர்வால்தான் இந்த நெடிய அஞ்சலை எழுதியிருக்கிறேன் நான்.

எனவே, இந்த அஞ்சல் கிடைத்ததும் இதை ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு உங்களின் உளம்திறந்த பதில் சுருக்கமாகவாவது உடனடியாக எனக்கு எழுதுங்கள். ஏனென்றால், மற்றவர்களைப் போல் நாலு இடத்திற்கு அடுத்தவர்களின் துணையில்லாமல் நானாகவே செல்ல முடியாத உடல்நிலையில் உள்ளேன் நான். இருந்தாலும் என்னுடைய எழுத்துக்கள் நாடு முழுவதும் சென்று 'அருட்போர் வியூக நாயகம்' என்ற பொறுப்புக்குரிய பணியினை செய்ய வேண்டும், செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறவன் நான். என்னுடைய ஆசை தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் துணையால் தங்களைப் போன்றவர்களால் நிறைவேற வேண்டும், நிறைவேற வேண்டும், நிறைவேற வேண்டும்.

அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!
அம்மையப்பன்கள் திருவருளே!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**அன்பு**
**தலைமைப்பீட எழுத்தர்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் சைக்குலோசுடைல் செய்யப்பட்ட தட்டச்சுப் பிறதியாகக் கிடைத்தது.//**

# இந்து மதம்தான் சைவ சமயம்!

**தொகுப்பு: சித்தர் யோகமுனி வேம்பை சீ. மணி.**

சைவ சமயம் என்பது மதமேயல்ல. சைவம் என்றால் சிவன். சிவனை வழிபடுபவர்கள் சைவர்கள். அந்த சிவனே வேதநாயகமாக இருக்கின்றார். சிவன் என்ற சொல் சைவமாயிற்று. சிவனை வணங்குகின்றவர்கள் சைவர்கள். இதில் வீர சைவர்கள் என்பவர்கள் சத்தியை வணங்காமல் சிவனை மட்டும் வணங்குவார்கள்.

சைவ சமயத்தில் கடவுள் சிவன்தான். அந்த சிவன் அருளிய வேதம்தான் இருக்கு வேதம், யாம வேதம், அசுர வேதம், அதர்வான வேதம். சிவன்தான் வேதமே! சிவன்தான் வேதத்தின் பொருள்!

அந்த சிவனின் நேரடி வாரிசுதான் எங்களது பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். சிவன் இந்துவேதத்திற்காக தோற்றுவித்த மடம்தான் பதினெண்சித்தர் மடம். அப்படிச் சிவனால் தோற்றுவிக்கப்பட்ட பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதிதான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். அந்தச் சிவபெருமான் இந்துமதத்தை தலைமைதாங்கித் தோற்றுவித்ததுதான் பதினெண்சித்தர் பீடம். அப்படி சிவனால் தோற்றுவிக்கப்பட்ட பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதிதான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். சிவபெருமான் இந்துமதத்திற்காக அருளிய நான்கு வேதத்தின் நாயகம்தான் எங்களது அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். அதாவது சிவபெருமானின் நேரடியான வாரிசுதான் எங்களது அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.

சிவபெருமான் இந்துவேதத்தின் மூலம் வழங்கிய சிவலிங்கச் சின்னத்தை மெய்ஞ்ஞானக் கொடியில் தாங்கி மக்களுக்கு அருள் வழங்குபவர்தான் எங்களது அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார். பதினெண்சித்தர் மடத்தின் மெய்ஞ்ஞானக் கொடியே சிவலிங்கக் கொடிதான்.

சைவ சமயம் என்பது பதினெண்சித்தர் மடம் என்ற ஆலமரத்தின் கிளையாகவோ அல்லது இலையாகவோதான் இருக்கிறது அல்லது இருக்க முடியும். சைவ சமயத்தின் தத்துவங்களும் சித்தாந்தங்களும் இந்துவேதத்திலிருந்துதான் பிறந்தவை. அந்த இந்துவேதத்தின் தலைமை மடம்தான் பதினெண்சித்தர் மடம். அந்த பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதிதான் எங்களது அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார். எனவே, பதினெண்சித்தர் மடாதிபதியின் கருத்துக்களைக் கூறுவது என்பது சைவ சமயத்தைத் தாக்குவதற்கு அல்ல! சைவ சமயம் திருந்துவதற்காகத்தான். சைவ சமயம் பதினெண்சித்தர் மடத்திற்கு அப்பாற்பட்டது அல்ல! பதினெண்சித்தர் மடத்திற்கும், இந்துவேதத்திற்கும் உட்பட்டதுதான் சைவ சமயம்.

சைவ சமயம் என்பது பன்னிரண்டாம் நூற்றாண்டில் மெய்கண்ட சிவாச்சாரியார் உருவாக்கியது அல்ல! அப்படி கற்பனை செய்து கொண்டு வாழாதீர்கள்! கத்தரிக்காயும், வெண்டைக்காயும் சாப்பிட வேண்டுமென்று கூறுவது சைவ சமயம் அல்ல! அப்படிப்பட்ட சைவ சமயம் தேவையில்லை. அவரவர்கள் சாப்பிட்டுக் கொண்டு போய்விடுவார்கள். கேலிக்கூத்தாக்காதீர்கள்.

சைவ சமயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்துவேதத்தைப் படியுங்கள். இந்துவேதம் தமிழில்தான் இருக்கிறது. இந்துவேதத்தின் 36 நூல்களையும் தமிழ்மொழியில்தான் கூறினார் சிவபெருமான். சிவபெருமான் தமிழன்தான்! சைவசமயம் நீங்கள் சொல்லும் பதினான்கு சைவ சமய சித்தாந்த நூல்களுக்குள் மட்டும் அடங்குவது அல்ல.

சைவ சமய வாதிகளே! சைவ சமய மடாதிபதிகளே! நீங்கள் கூறும் சைவசமய சாத்திரங்கள் எல்லாம் வேதங்கள் ஆக முடியாது!? வேதத்தின் பலநூறு அங்கங்களில் ஒன்றுதான் இந்தச் சாத்திரங்கள்! உங்களிடம் இந்தச் சாத்திரங்கள் இருக்கின்றதென்ருல்! சாத்தரங்கள் எங்கே?! சாத்திறங்கள் எங்கே?!

உங்களிடம் பன்னிரண்டு திருமுறைகள் இருக்கிறதென்ருல், பன்னிரண்டு திருமறைகள் எங்கே? பன்னிரண்டு திருநெறிகள் எங்கே? பன்னிரண்டு திருவேதங்கள் எங்கே?

அத்தரம், அத்திரம், அத்திறங்கள் எங்கே?
சூத்தரம், சூத்திரம், சூத்திறங்கள் எங்கே?
தோத்தரம், தோத்திரம், தோத்திறங்கள் எங்கே?
நேத்தரம், நேத்திரம், நேத்திறங்கள் எங்கே?
வேத்தரம், வேத்திரம், வேத்திறங்கள் எங்கே?
கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம் எங்கே?
குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம் எங்கே?
தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம் எங்கே?
திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம் எங்கே?
அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம் எங்கே?
மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் எங்கே?

எனவே, சைவ சமயம் தெரியாதவர்கள்தான் சைவ சமயக் காரர்கள் அதைத் தெரிவிக்கத்தான் பதினெண்சித்தர் மடாதிபதி வந்திருக்கிருர். அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் வந்திருக்கிருர். உங்களுடைய சைவ சாத்திரங்களின் மூலமான இந்துவேதத்தின் நாயகம்தான் பதினெண்சித்தர் மடாதிபதி.

எனவே, போலி சைவர்களாக வாழாதீர்கள். சைவ சமயத்தைத் தெரிந்து கொண்டு வாழுங்கள். வாருங்கள், சைவ சமயத்தைக் கற்றுத் தருகிறோம்.

சிவபெருமான் கூறிய இருக்கு வேதத்தின் 1,10,592 இந்துவேத உரைக்கோவைகளிலும் விரவிக் கிடப்பதுதான் சைவ சமயம். அதுமட்டுமல்ல, அசுர வேதத்தின் 1,10,592 இந்துவேத உரைக்கோவைகளிலும் விரவிக் கிடப்பதுதான் சைவ சமயம். யாம வேதத்தின் 1,10,592 இந்துவேத உரைக்கோவைகளிலும் விரவிக் கிடப்பதுதான் சைவ சமயம். அதர்வான வேதத்தின் 1,10,592 இந்துவேத உரைக்கோவைகளிலும் விரவிக் கிடப்பதுதான் சைவ சமயம். இவையல்லாமல் சிவபெருமானே தன் அருகில் அமர்ந்திருக்கக் கூடிய சத்தி தேவிக்கு அருளிய 4,42,368 சுலோகங்கள் எனப்படும் சூலகங்கள் விளக்கி உரைப்பதுதான் சைவ சமயம்.

எனவே, நான்கு வேதங்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்களிலும், சுலோகங்களில் உள்ள கருத்துக்களிலும்தான் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இந்துவேதங்களும், சுலோகங்களும் இந்துமதம் என்று சொல்லித்தான் சைவ சமயத்தை சொல்லுகின்றன. சிவன் கூறுகின்ற சமயம்தான் சைவ சமயம் என்றால், சிவன் கூறுகின்ற இந்துமதம்தான் சைவ சமயம்.

நாங்கள் உங்களை விமரிசித்தால் கோபம் வருகிறது! பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து வேற்று நாட்டு மாற்று மதத்தார்கள் உங்களை விமரிசித்தால் மட்டும் கோபம் வருவதில்லை?! ஏன்? ஏன்? ஏன்? சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! சிந்தியுங்கள்!!! சந்தியுங்கள்! சந்தியுங்கள்!! சந்தியுங்கள்!!!

இது நல்ல தருணம். அரிய வாய்ப்பு. சைவ சமயத்தின் முழுமுதற் பரம்பொருளான முழுமுதற் கடவுளான சிவபெருமானின் நேரடியான வாரிசே உங்களுக்கு மெய்யான சைவ சமயத்தைப் போதிக்க வந்திருக்கிறார். தெரிந்து, புரிந்து திருந்துங்கள்! இந்துமதம்தான் சைவ சமயம்; சைவ சமயம்தான் இந்துமதம். இதைத் தெரியாததால்தான் சைவ சமயத்திற்கென்று ஏழு எட்டு மடங்கள் இருந்தும், அந்த மடத்தில் வேலை பார்த்து வருபவருக்கோ அல்லது அந்த மடத்தின்

மடாதிபதிக்கோ அல்லது மடாதிபதிகளைத் தலைவர்களாக ஏற்று சைவ சமயத்தாருக்கோ அல்லது சைவ சமய மக்களுக்கோ சைவ சமயம் என்றால் என்னவென்று தெரியாது! தெரியாது!! தெரியாது!!! இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

சைவ சமயத் தலைவர்களுக்கு சைவ மடாதிபதிகள், பண்டாரங்களுக்கு சைவ சமயம் என்றால் என்னவென்று சொல்லத் தெரியுமா?! நாங்கள் கூட்டம் போடுகிறோம். பேச வருகின்றீர்களா?! அல்லது நீங்கள் கூட்டம் போடுகிறீர்களா?! நாங்கள் பேசுகிறோம்.

சைவ சமயத்திற்கு என்று என்ன விளக்கம் வைத்திருக்கிறீர்கள்?! என்ன புத்தகம் வைத்திருக்கிறீர்கள்?! நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். சைவ சமயத்தை வளர்க்க முடியுமா?! அல்லது வளர்த்திருக்கிறீர்களா?! அல்லது சைவ சமயம் என்றாவது வளர முடியுமா?! ஏனென்றால் குருடர்களுக்கு குருடன் வழிகாட்டியது போல் இருக்கின்றது சைவ சமயம்.

இனியும் சைவ சமயம் என்று சொல்லாதீர்கள்! இந்து மதம் என்று சொல்லுங்கள். சைவ சமயம் என்ற ஒரு மதமே கிடையாது! இனியும் உங்களுக்கு சந்தேகம் இருந்தால்! உங்களுடைய கடவுளான சிவபெருமான் தோற்றுவித்த மடத்தின் மடாதிபதி அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் இருக்கிறார், அவரைச் சந்திக்க வாருங்கள்!

இனிமேலாவது உங்களுக்கு புரியட்டும். இந்து மதம்தான் சைவ சமயம். சைவ சமயம்தான் இந்து மதம். எங்களது குருதேவரை எதிர்க்கிறீர்கள் என்றால் உங்கள் சிவபெருமானையே எதிர்க்கிறீர்கள்!? சைவ சித்தாந்தத்தையே எதிர்க்கிறீர்கள் என்று பொருள். இந்துமதத்தை குறை கூறுகின்றீர்கள் என்றால் உங்கள் முழுமுதற் பரம்பொருள் சிவனை எதிர்க்கிறீர்கள் என்று பொருள்.

நாங்கள்தான் உண்மையான சைவர்கள். சைவம் என்பது சாப்பாடு பற்றிக் கூறுவது அல்ல!? இனியும் ஏமாற்றிக் கொண்டு இருப்பீர்கள்

என்ருல், காலதாமதம் என்ருல்; மாற்று மதங்கள் எல்லாம் உங்களைத் தூக்கி சாப்பிட்டு விடுவார்கள். ... உங்களைத் தின்று ஏப்பம் விட்டு விடுவார்கள்... எப்படி உங்களுக்குத் தெரியாமல் மாற்றுமதங்கள் வந்தன? சைவ சித்தாந்தம் என்ன செய்து கொண்டிருந்தது? என்ன செய்து வருகிறது? இதற்குப் பரிகாரமே அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியாரின் தலைமையை ஏற்று செயல்படுவதுதான். இதை ஏன் கேட்கிறேம் என்ருல் யோகமுனி கேட்கவில்லை. இந்துவேத நாயகம் அந்தணர் அண்ணல் கேட்கிருர்; உங்கள் சைவ சமயத்தின் கடவுளான சிவபெருமானின் நேரடி வாரிசு கேட்கிருர், பதினெண்சித்தர் மடாதிபதி கேட்கின்ருர்.

**தொகுப்பு:**

**சித்தர் யோகமுனி வேம்பை சீ. மணி.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: வேம்பை சித்தரடியான் திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"இந்து வேதத்தால் தமிழ் வளரும்,
தமிழால் இந்து வேதம் வளரும்."

"இந்துமதத்தால் தமிழன் உயர்வான்,
தமிழனால் இந்துமதம் உயரும்."

"இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவில்
இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும்
தமிழ்மொழியில்தான் இருக்கின்றன."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-